2. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. சி. சண்முகவேலு

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2003-2004 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எண்பத்தி எட்டாவது அறிக்கையை குழுத் தலைவரின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.எஸ். ரமணீதரன்.

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2003-2004 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்தி ஐந்தாவது முதல் நூற்று நாற்பத்தி ஒன்றாவது வரையிலான 7 அறிக்கைகளை குழுத் தலைவரின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கொடுக்கப்பட்ட திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு வழிமொழியப்படவேண்டும். திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அளித்துள்ள கீழ்க்கண்ட திருத்தங்களை முன்மொழிகிறேன்:

"1. நீலகிரி மாவட்டத்தில் பசுந்தேயிலைக்கு கிலோ ஒன்றுக்கு ரூபாய் 15 வீதம் விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்வது குறித்தும்;

2. இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் கம்பெனி தொழிற்சாலை தனியாருக்கு விற்கப்படுவதை தடுக்கும் வகையில் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்வது குறித்தும்;

2004 பிப்ரவரி 9] [திரு. எச்.எம். ராஜு]

3. நீலகிரி மாவட்டத்தில் மஞ்சூர், கவர்னர் சோலா, குருத்துக்குளி கிராமப் பகுதிகளிலும், ஊட்டி காந்தல் பகுதியிலும் கால்நடைகளையும் மனிதர்களையும் புலி, சிறுத்தைகள் தாக்கிக் கொல்வதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. எச்.எம். ராஜு முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அளித்துள்ள கீழ்க்கண்ட திருத்தங்களை முன்மொழிகிறேன்:

"1. வால்பாறை தொகுதியில் உள்ள அக்காமலை, கருமலையில் உள்ள குறுகிய பாலத்தை அகலப்படுத்த நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

2. வால்பாறை தொகுதியில் ஒரு அரசினர் கலைக் கல்லூரி தொடங்குவது குறித்தும்;

3. வால்பாறை தொகுதி ஆழியார் நகர் வாய்க்கால் மடைகளை புதுப்பிக்கும் திட்டம் குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

திரு. எச்.எம். ராஜு: திரு. கோவை தங்கம் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அளித்துள்ள கீழ்க்கண்ட திருத்தங்களை முன்மொழிகிறேன்:

"குன்னூர் மற்றும் கோத்தகிரியில் டைடல் பார்க் ஏற்படுத்துவது குறித்தும்;

2. கோத்தகிரியில் அரசு கலைக் கல்லூரி ஏற்படுத்துவது குறித்தும்;

[திரு. கா. கந்தசாமி] [2004 பிப்ரவரி 9

3. கோத்தகிரி ஒன்றியம், தெங்குமரஹாடா கிராமம், கல்லம் பாளையத்தில் மாயாற்றின் குறுக்கே பாலம் கட்டுவது குறித்தும்;

4. குன்னூர் அருகே உள்ள பக்காசூரன் மலையை சுற்றுலாத் தலமாக அறிவிப்பது குறித்தும்;

5. குன்னூர் பஸ் நிலையத்தை விரிவுபடுத்துவது குறித்தும்;

6. குன்னூர், கோத்தகிரி பகுதிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களையும், டாக்டர் பணியிடங்களையும் நிரப்புவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

திரு. கோவை தங்கம்: திரு. கா. கந்தசாமி முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே. ஹேமச்சந்திரன், இருக்கையில் இல்லை; திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை; திரு. ப. அரசன், இருக்கையில் இல்லை; திருமதி எஸ். மகேஸ்வரி, இருக்கையில் இல்லை; திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அளித்துள்ள கீழ்க்கண்ட திருத்தங்களை முன்மொழிகிறேன்:

"1. கைத்தறி தொழிலைப் பாதுகாக்க சிட்டா நூலுக்கு வரி விலக்கு அளிக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துவது குறித்தும்;

2. மதுரை மாநகராட்சிக்கும், மற்ற உள்ளாட்சிகளுக்கும் மாநில அரசு உரிய பங்கினை அளிப்பது குறித்தும்;

3. மதுரை மாநகரின் தண்ணீர் பற்றாக்குறையைப் போக்க வைகை வடகரை குடிநீர்த் திட்டத்தை விரைவில் நிறைவேற்றுவது குறித்தும்;

4. விளையாட்டுத் துறையில் மலை ஜாதி இளைஞர்களுக்கு பயிற்சி தரும் திட்டம் குறித்தும்;

5. கணினி பயிற்சித் தேர்வையும் அரசே நடத்தி சான்றிதழ் தரும் திட்டம் குறித்தும்;

6. சாலை அமைப்புப் பணிகளில் பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்துவது குறித்தும்;

7. மதுரை கிழக்குத் தொகுதி காமராசபுரம், அனுப்பானடி, கீரைத்துறைப் பகுதியில் உள்ள மக்களுக்கும், தமிழகத்தின் பல்வேறு பகுதி மக்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் குறித்தும்;

8. மதுரை 48-வது வட்டத்தில் உள்ள பட்டறைத் தொழிலாளர்கள் மற்றும் அனுப்பானடி பகுதியைச் சார்ந்த மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

9. மதுரை ஆவின் பாலகத்தில் பணி நிரந்தரம் செய்யப்படாமல் உள்ள தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்வது குறித்தும்;

10. எல்லீஸ் நகர் பகுதியில் வீட்டுவசதி வாரியத்தில் வீடு பெற்று முழுப் பணம் செலுத்திய பிறகும் பத்திரம் கிடைக்காமல் உள்ளவர்களுக்கு பத்திரம் வழங்குவது குறித்தும்

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

செல்வி க. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. என். நன்மாறன் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.வி. முரளிதரன், இருக்கையில் இல்லை. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

4. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்)

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமராவதி ஆற்றிலே மணல் எடுப்பது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்)